குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

சி.சி. எண்.87/2020

அ.சா. 1

2023–ம் ஆண்டு ஆகஸ்டு 24–ம் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 1–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சண்முகம் | ஜாதி | |
| தந்தை பெயர் | முத்து | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 3.35 மணி,

Accused (Marimuthu), absent. Petition 317 Cr.P.C filed and allowed. Advocate Mr. K.T.Selladurai present for accused. APP Mr.Shanmuga sundaram Present.

**முதல் விசாரணை**.

1. நான் கோவிலூர் காலனியில் குடியிருந்து கொண்டு பெயிண்டர் வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்து போன உதயசூரியன் எனக்கு தெரியும். அவர் எனது பங்காளி முறையாவார். அக்டோபர் மாதம் 2019–ம் வருடம் தேதி நினைவில்லை. சுமார் மாலை 6.00 மணியளவில் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் ஓமலூரில் பிருந்தாவனம் தியேட்டர் அருகே உதயசூரியனுக்குலாரி மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள். நான் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவர் இறந்து விட்டார்.

2. மறுநாள் காலை 7.00–7.30 மணியளவில் சம்பவ இடத்தில் நானும் மற்றொரு நபரும் பார்த்து கொண்டிருந்தோம். அப்போது சம்பவ இடத்தில் போலீசார் விபத்து குறித்து விசாரித்து படம் வரைந்து எழுதி கொண்டிருந்தார்கள். எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் சாட்சி கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். (**அந்த பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

என்னுடன் கையெழுத்து இட்ட நபர் பெயர் எனக்கு தெரியாது. நான் வெள்ளைதாளில் கையெழுத்து செய்தேன். அதில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. வரைபடத்தில் என்ன படம் வரைந்திருந்தது என்று எனக்கு தெரியாது. விபத்து பற்றி கேள்விபட்டு தான் எனக்கு தெரியும்.

மறு விசாரணை. இல்லை.

விசாரணை முடிந்த நேரம்: மதியம் 3.45 மணி,

சாட்சி. சண்முகம்

ஓம்/– எஸ்.ஷர்மிளா,
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.